2022 மே 10]

சொல்கின்ற முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம். இன்றைக்குக்கூட இலங்கையில் பொருளாதாரச் சிக்கலில் தவிக்கின்ற மக்களுக்கு உதவி செய்கின்ற விதமாக தாயுள்ளத்தோடு 123 கோடி ரூபாய்க்கு உணவு, மருந்து, பால் பவுடர் போன்ற பொருட்களை அனுப்புவதற்கு நம் துறை சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்துள்ளார்கள், அனுமதியும் கொடுத்துள்ளார்கள். அதற்கும் இந்த மன்றத்தில் நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 260, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

260—

சுற்றுலாத் தலம்

***3631—திரு. துரை. சந்திரசேகர்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, பழவேற்காடு கடற்கரை மற்றும் ஏரிப் பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் முதற்கண் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதியில் உள்ள பழவேற்காடு கடற்கரை மற்றும் ஏரிப் பகுதியினை சுற்றுலாத் துறைமூலம் மேம்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு நன்றாகத் தெரியும். பழவேற்காடு என்பது வெறும் மீன்பிடி துறைமுகம் மட்டுமல்ல; அதில் சில வியப்பூட்டும் வரலாற்று உண்மைகளும் இருக்கின்றன. குறிப்பாக, இந்தியாவின் இரண்டாவது உவர் நீர் ஏரி; சுமார் 15,000 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது. அதேபோல, டச்சுக்காரர்கள், போர்ச்சுகீசியர்கள், சோழர்கள், விஜய நகரப் பேரரசு ஆகியோரின் ஆளுகையின்கீழ் இருந்த பகுதி அது. அங்கே இஸ்லாமிய பெருமக்கள் வழிபடுகின்ற பள்ளிவாசல், நிழல் கடிகாரம், டச்சுக்காரர்களின் கல்லறை, கலங்கரை விளக்கம், ஏரியும், கடலும் கைகுலுக்குகிற முகத்துவாரம் ஆகியவை உள்ளன.*

முற்பகல் 11-25

மேலும், அண்ணாமலைச்சேரி மற்றும் பழவேற்காடு பகுதியிலுள்ள பறவைகள் சரணாலயத்திற்கு சுமார் 20,000 அரிய வகைப் பறவைகள் அயல்நாடுகளிலிருந்து, குறிப்பாக, சைப்ரஸ், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்படுமா என்று முதல் கேள்வியைக் கேளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதிலை வாங்குங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்கிறார் என்று கேட்டுவிட்டு, பிறகு அடுத்த கேள்வியைக் கேட்கலாம். இவ்வளவு விரிவாக வேண்டாம்.*

திரு. துரை. சந்திரசேகர்: *இதுபோன்ற சிறப்புவாய்ந்த பழவேற்காடு பகுதியை சுற்றுலாத் தலமாக அறிவித்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல், எந்த இடத்தையும் அரசு சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை.*

இருப்பினும், பழவேற்காடு கடற்கரை மற்றும் ஏரிப் பகுதி இயற்கை எழில் சூழ்ந்த பகுதியாகும். இங்கு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் பறவைகள் வந்து தங்குவதால், இந்த இடம் பறவைகள் சரணாலயமாக வனத் துறையால் அறிவிக்கப்பட்டுள்ளது. ஏரிப் பகுதி, கடற்கரைப் பகுதி ஆகிய இரண்டு பகுதிகளும் வனப் பகுதியின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளாகும். இங்குள்ள இயற்கை வளங்கள் பாதிக்காமலும், அங்கு வரும் பறவைகளுக்கு இடையூறு இல்லாமலும்தான் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பணிகளை மேற்கொள்ள இயலும். அதற்கு வனத் துறையின் NOC-தடையில்லாச் சான்று மிகவும் அவசியமாகும். அதுமட்டுமல்லாமல், அவ்விடங்களில் சுற்றுச்சூழலுக்கு உகந்த சுற்றுலா சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றால், தேசிய வன விலங்கு வாரியம்-National Board for Wildlife-ன் அனுமதியும் பெற வேண்டுமென்ற நிலையுள்ளது.

அதுமட்டுமல்லாமல், Ministry of Environment, Forest and Climate Change-சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், நிறைய கட்டுப்பாடுகள், விதிமுறைகளை விதித்திருக்கின்றது. அங்கு சுற்றுலா சார்ந்த Eco-tourism சார்ந்த சில நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அந்தப் பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதால், வனத் துறையின் தடையில்லாச் சான்றிதழும், வன விலங்கு வாரியத்தின் சான்றிதழும் பெறப்பட வேண்டும். அந்த இரு தடையில்லா சான்றிதழ்களும் பெறப்பட்டால், நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர் அவர்கள்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஏரியில் குறைந்தபட்சம் படகு சவாரியையாவது அரசு சட்டப்பூர்வமாக்க வேண்டும். ஏனென்றால், சட்டத்திற்குப் புறம்பாக நடக்கின்ற படகு சவாரிகளால் அவ்வப்போது சில உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. உயிரிழந்தோரின் உடல்களைக்கூட எங்களால் தேட முடியவில்லை. ஆகவே, குறைந்தபட்சம் படகுச் சவாரியை அரசு சட்டப்பூர்வமாக்கினால், அந்தப் பகுதி மக்களுக்கும், வெளிநாட்டுப் பயணிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போலத்தான் அந்தப் பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ளது. அங்குள்ள* bird sanctuary *முழுக்க, முழுக்க வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ளது. வனத் துறையின் கருத்துரு பெறப்பட வேண்டும். வன விலங்கு வாரியத்திடமிருந்தும் நாம் அனுமதி பெற வேண்டும். அந்த இரு அமைப்புகளிடமிருந்தும் அனுமதி பெறப்பட்டால், சுற்றுலா சார்ந்த நடவடிக்கைகளை நாம் அங்கு மேற்கொள்ளலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் எலச்சிபாளையம் ஒன்றியத்தில் இலுப்புலி ஏரி என்ற ஓர் ஏரி இருக்கிறது. 147 ஏக்கர் பரப்பளவு கொண்டது; 365 நாட்களிலும் அந்த ஏரியில் தண்ணீர் இருக்கிறது. அந்தப் பகுதியிலே சுற்றுலாத் தலமென்று எந்த இடமும் கிடையாது. அதிகாரப்பூர்வமில்லாமல் மக்கள் அந்த ஏரியை சுற்றுலாத் தலமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஏரியை அதிகாரப்பூர்வமாக சுற்றுலாத் தலமாக அறிவித்து, அதனை மேம்படுத்த முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தவர். அருகாமையிலுள்ள திருச்செங்கோடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர். அந்தத் தொகுதியிலுள்ள அந்த ஏரியைக் கண்டிப்பாக நாங்கள் ஆய்வு செய்து, உரிய நடவடிக்கையை மேற்கொள்வோம். தற்போதுள்ள* dam sites*-ல், நீர்த்தேக்கங்களில் படகு சவாரி செய்வதற்காக ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் ஆணையைப் பெற்று, 4 ஏரிகளுக்கு நாங்கள்* permission *வாங்கியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஏரியை ஆய்வு செய்து, கருத்துரு பெற்று, சாத்தியக்கூறுகள் இருப்பின், நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2022 மே 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

முற்பகல் 11-30

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் மாநகராட்சி, கோயில்கள் நிறைந்திருக்கிற ஒரு மாநகராட்சி. உலகில் வாழும் ஆன்மிக மக்கள் அனைவரும் அதிகமாக வந்து, தங்கிச் செல்கிற இடம். அந்த இடத்தில் 1989 ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, மறைந்த மாண்பிற்கினிய அண்ணன் திரு. கோ.சி. மணி அவர்கள் அமைச்சராக இருந்தபோது, மகாமகத் திருக்குளத்தில் படகு சவாரி இருந்தது. அதன் பிறகு இரண்டு ஆண்டுகளில் ஆட்சி போன பிறகு அந்த படகு சவாரியை எடுத்துவிட்டார்கள். பல்வேறு கிராமங்களிலிருந்து வருகிற மக்களுக்கு பொழுதுபோக்கும் இடமாக ஒன்று, மகாமகத் திருக்குளமும் மற்றொன்று சேய் குளமும் உள்ளது. இரண்டு குளங்களிலும் படகு சவாரி வசதி அமைத்து மக்களின் பொழுதுபோக்கிற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிற்குள் வரும். எனவே, இந்து சமய அறநிலையத் துறையிடம் தடையில்லாச் சான்றிதழ் பெற்று, சாத்தியக்கூறுகள் இருப்பின் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல் அவர்கள்.*

திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில், வேடந்தாங்கல் ஊராட்சியில் உலகப் புகழ் பெற்ற பறவைகள் சரணாலயம், 1936 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. குறிப்பாக,* Canada, Siberia, Bangladesh, Burma, Australia *ஆகிய நாடுகளிலிருந்து இங்கு பறவைகள் வருகின்றன. இந்தச் சரணாலயம், சுற்றுலாப் பகுதியைக் காண வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப்*

பயணிகளைக் கவரும் வண்ணம் உள்ளது. எனவே, இப்பகுதியில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அரசு முன்வருமா என தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடந்தாங்கலும், பழவேற்காடுபோல் பறவைகள் சரணாலயத்தில் உள்ள பகுதி. அதுவும் வனத் துறையின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. வனத் துறை மற்றும் வன விலங்கு வாரியத்தின் அனுமதியைப் பெற்றுதான் அப்பகுதிகளில் எந்த சுற்றுலா சார்ந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வைத்திணான்குப்பம் தொகுதி, குடியாத்தம் ஒன்றியத்திலிருக்கின்ற நெல்லூர்பேட்டை ஏரியை சுற்றுலாத் தலமாக அமைப்பதற்கு துறை முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதன் அடிப்படையில், அந்த ஏரியையும், சுற்றுலாத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களையும் பார்வையிட்டு என்ன நடவடிக்கை மேற்கொள்ள முடியுமோ, அதனை ஆய்வு செய்து, கருத்துரு பெற்று, சாத்தியக்கூறுகள் இருப்பின் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

2022 மே 10]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஏரியில் 3 மாதங்களுக்கு கூட தண்ணீர் இருக்காது. எப்போதாவதுதான் தண்ணீர் வரும்; உடனே போய்விடும். பிறகு எவ்வாறு அவ்விடத்தில் சுற்றுலாத்தலம் அமைக்க முடியும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. கவன ஈர்ப்பு

தென்காசி தொகுதி, வீரகேரளம்புதூர், நவநீதகிருஷ்ணசாமி கோயில், குடமுழுக்கு செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள். (குறுக்கீடுகள்)*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதி வீரகேரளம்புதூரில் உள்ள பழமைவாய்ந்த நவநீதகிருஷ்ணசாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் 1918 ஆம் ஆண்டில் நடைபெற்றதாம். அதன் பிறகு சுமார் 103 ஆண்டுகளாக கும்பாபிஷேகம் நடத்தப் பெறாமல். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார், நிகழ்ச்சி நிரலில் என்ன இருக்கிறதோ அதை மட்டும் சொல்லுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன் என்ற அந்த ஒரு வரியை மட்டும் படியுங்கள்.*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதி தென்காசியிலுள்ள வீரகேரளம்புதூரில் உள்ள நவநீதகிருஷ்ணசாமி திருக்கோயில் திருப்பணிகள்*